இன்றைய செய்தி நாளைய வரலாறு



Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 188 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 05 – திங்கள்கிழமை 17 பிப்ரவரி 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 188 : Thiruvalluvar Year - 2056 - Maasi 05 - Monday 17 February 2025 - Dak 16 Pages ₹ 5.00

## அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட இரு மொழிக் கொள்கைக்கு எதிராக மும்மொழித் திட்டத்தை திணிக்க முயற்சிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

### ‘கல்விக்கு – ஒன்றிய அரசு ஏகபோக எஜமானர்கள் அல்ல’ என்றும் விமர்சனம்!

**சென்னை, பிப்.17 -**

**அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட இரு மொழிக் கொள்கைக்கு எதிராக மும்மொழித் திட்டத்தை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**‘கல்விக்கு, ஒன்றிய அரசு ஏகபோக எஜமானர்கள் அல்ல’ என்றும், ‘திமிராகப் பேசினால் தமிழர்கள் குணத்தை டெல்லியில் பார்க்க வேண்டி இருக்கும்’ என்றும் குறிப்பிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**



தேசிய கல்வி கொள்கையை தமிழ்நாடு அரசு இதுவரை ஏற்காததால் கல்விக்காக ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டிய நிதியை இன்னும் ஒதுக்கவில்லை. இந்தத் திட்டத்தை கேரளா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களும் இதுவரை ஏற்கவில்லை. இதனால் மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு கொடுக்காமல் உள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூ.2,152 கோடியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை.

மேலும் அந்த நிதியை பா.ஜ.க. ஆளும் உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துவிட்டதாக ஒன்றிய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஏற்கனவே முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தேசிய கல்வி கொள்கையை ஏற்காவிட்டால் நிதி தர முடியாது என ஒன்றிய அரசு ஆணவத்துடன் தெரிவித்துள்ளது.

**ஒன்றிய அமைச்சரின் ஆணவப் பேச்சு!**

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் காசி தமிழ் சங்கமம் 3.0 நிகழ்ச்சியில் ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கலந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தர்மேந்திர பிரதான், “மும்மொழி கொள்கையை பிற மாநிலங்கள் ஏற்கும்போது, தமிழ்நாடு ஏற்க மறுப்பது ஏன்?” என கேள்வி எழுப்பினார். தொடர்ந்து அவர் கூறுகையில், “தமிழ்நாட்டுக்கு நிதி நிலுவையில் இருப்பது எனக்கு தெரியும். ஆனால், புதிய தேசிய கல்வி கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக் கொண்டால்தான் நிதி விடுவிக்கப்படும். மும்மொழி கொள்கையை ஏற்காவிட்டால் நிதி ஒதுக்க சட்டத்தில் இடமில்லை” என்று கூறினார்.

**சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!**

இதற்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் களின் சமூக வலைதளப் பதிவில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“They have to come to the terms of the Indian Constitution” என்கிறார் ஒன்றியக் கல்வி அமைச்சர். மும்மொழிக் கொள்கையை ‘rule of law’ என்கிறார்.**

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவு மும்மொழிக் கொள்கையைக் கட்டாயமாக்குகிறது? எனக் கல்வி அமைச்சரால் கூற முடியுமா?**

**மாநிலங்களால் ஆனதே இந்திய ஒன்றியம்! ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளதுதான் கல்வி! அதற்கு ஒன்றிய அரசு ஏகபோக எஜமானர்கள் அல்ல!**

**“மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது” என்று blackmail செய்யும் தடித்தனத்தைத் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்!**

**எங்கள் உரிமையைத்தான் கேட்கிறோம்! உங்கள் தனிச்சொத்தைக் கேட்பது போல் திமிராகப் பேசினால், தமிழர்களின் தனிக்குணத்தையும் டெல்லி பார்க்க வேண்டியிருக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

---

ஊராட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு அளித்து திட்டங்களை செயல்படுத்துவதில்

# இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

### ஒன்றிய அரசின் அறிக்கையில் தகவல்!

*சென்னை, பிப். 17 -*

*ஒன்றிய அரசின் ஊராட்சிகளின் அதிகாரப் பகிர்வு குறியீடு அறிக்கை வெளியீட்டின்படி ஒட்டுமொத்த தரவரிசையில் தமிழ்நாடு 3வது இடத்தையும், செயல்பாடுகள் குறியீட்டில் முதலிடத்தையும் பெற்றுள்ளது*

*“மாநிலங்களில் ஊராட்சிகளின் அதிகாரப் பகிர்வின் நிலை சான்றுகள் அடிப்படையிலான தரவரிசை” என்ற தலைப்பில் மத்திய இணை அமைச்சர் பேராசிரியர் எஸ்.பி. சிங் பாகேல், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் 2025 பிப்ரவரி 13 அன்று புது தில்லியில் வெளியிடப்பட்டது.*

*73-வது அரசியலமைப்பு திருத்தத்தில் கூறப்பட்டுள்ள “உள்ளாட்சி” என்ற தொலை நோக்குப் பார்வையை உணர்ந்து ஊராட்சி நிறுவனங்களை (PRI) மேம்படுத்துவதற்கான பயணத்தில் புதுதில்லியில் உள்ள இந்திய பொது நிர்வாக நிறுவனம் (IIPA) நடத்திய இந்த ஆய்வறிக்கை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.*

*இந்த மதிப்பீட்டை ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியலமைப்பு அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி அமைப்புகள் எவ்வளவு பங்காற்றியுள்ளன என்பதற்கான ஆழமான பகுப்பாய்வை இந்த அறிக்கை வழங்குகிறது. மேலும் மாநில அரசு தமது கட்டுப்பாட்டில் உள்ள வளங்களைப் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சரியாக பகிர்ந்தளிப்பதில் எவ்வளவு செயல்திறனை உடையதாக உள்ளது என அளவீடு செய்கிறது.*

*பின் வரும் குறியீடுகளின் அடிப்படையில் மாநிலங்களின் செயல்பாடுகள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.*

*I. கட்டமைப்பு*
*II. செயல்பாடுகள்*
*III. நிதி*
*IV. பிரதிநிதிகள்*
*V. திறன் மேம்பாடு*
*VI. பொறுப்புடைமை*

*ஒட்டு மொத்த குறியீட்டின் படி மாநிலங்களின் தரவரிசைப் பட்டியலில்தமிழ்நாடுமூன்றாவது இடத்தில் உள்ளது. ஊராட்சிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்தும் விதத்திலும் அதிகாரப் பகிர்வு அளித்து திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விதத்திலும் முதலிடத்தில் உள்ளது.*

*ஆய்வு அறிக்கையின்படி செயல்முறைப்படுத்தும் காரணிகளின் கணக்கீட்டின் படி தமிழ்நாடு அதிக மதிப்பெண்களையும், ‘திறன் மேம்பாடு’ மற்றும் ‘செயல்பாடுகள்’ ஆகியவற்றில் இரண்டாவது இடத்தையும், ‘நிதி பரிவர்த்தணை’களை பொறுத்தவரை தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு ஊரக திட்டங்களில் ஊராட்சிகளின் ஈடுபாடு மிக உயர்ந்த தரத்தில் உள்ளது என்பதை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. ஊரக உள்ளாட்சியில் பொறுப்பு வகிக்கும் பிரதிநிதிகளின் ‘திறன் மேம்பாடு’ என்ற பரிமாணத்தில் தேவையை மதிப்பிடுவதிலும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கான பயிற்சியை நடத்துவதிலும் மாநிலம் சிறந்து விளங்குகிறது எனவும் ‘பயிற்சி நிறுவனங்களின்’ குறியீட்டில் மாநிலம் சிறப்பாக செயல்படுகிறது என்றும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.*

---

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உயர்ந்துவரும் செல்வாக்கு!

### ‘இந்தியா டுடே’ - சி வோட்டர் கருத்துக்கணிப்பில் தெளிவுபடுத்தியுள்ள உண்மை!

**நா**டு முழுவதும் சொந்த மாநிலத்தில் மக்கள் மத்தியில் அதிக ஆதரவை கொண்ட முதலமைச்சர் என்ற பட்டியலில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2ஆம் இடம் பிடித்துள்ளார்.




‘இந்தியா டுடே’ - C VOTER கருத்துக் கணிப்பில் கடந்தாண்டு 37% ஆக இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செல்வாக்கு தற்போது 57%ஆக உயர்ந்துள்ளது.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் போகும் இடமெங்கும் பொது மக்கள், முதலமைச்சருடன் செல்ஃபி எடுத்துக் கொள்வதில் காட்டும் ஆர்வமும், மகளிர் கை குலுக்கிட முந்தும் மகிழ்ச்சியும், இளையோர் “ அப்பா” என்றழைத்திடும் ஆழ்ந்த பாசமும், செல்வாக்கு உயர்ந்து கொண்டே வருவதற்குக் கண்கூடான சாட்சியங்கள் என்பதை இந்தக் கருத்துக் கணிப்பும் தெளிவு படுத்தியுள்ளது.**